RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்-19 | 19 ஜனவரி ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘ரூ.1,000 இல்லை... மது விற்பனை ரூ.47 கோடி அதிகரிப்பு’ தமிழக அரசை ‘டீகோடிங்’ செய்து சாடும் அன்புமணி

விழுப்புரம், ஜன.19

“பொங்கலையொட்டி மூன்று நாட்களில் ரூ.725 கோடிக்கு மது விற்பனையாகியுள்ளது. தமிழக மக்களை குடிக்கு அடிமையாக்கியது தான் திராவிட மாடலின் சாதனை” என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றம்சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “தமிழகத்தில் பொங்கல் திருநாளையொட்டி கடந்த 13, 14, 16 ஆகிய தேதிகளில் டாஸ்மாக் வாயிலாக மட்டும் ரூ.725 கோடிக்கு மது விற்பனையாகியிருப்பதாகவும், இது கடந்த ஆண்டு விற்பனையான ரூ.678.65 கோடியை விட ரூ.47 கோடி அதிகம் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இதுநிச்சயம் மகிழ்ச்சியளிக்கும் செய்தி இல்லை. கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் இன்னும் அதிக குடும்பங்கள் கண்ணீர் வடித்திருக்கின்றன என்பதையே இந்தச் செய்தி காட்டுகிறது.

ஒரு சொட்டு மது இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பது தான் மருத்துவர் ராமதாஸின் நோக்கம் அதற்காகத் தான் அவர் கடந்த 45 ஆண்டுகளாக போராடி வருகிறார். ஆனால், தமிழகத்தை ஆள்பவர்களோ, இங்கு ஒருவர் கூட மது குடிக்காதவர்களாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில், அனைவரையும் மதுவுக்கு அடிமையாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் விளைவு தான் கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் மது வணிகம் கடுமையாக அதிகரித்திருக்கிறது.

கடந்த ஆண்டு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.1,000 வழங்கப்பட்டது. ஆனால், நடப்பாண்டில் பொங்கல் பரிசுத் தொகுப்பில் பணம் வழங்கப்படவில்லை. ஆனாலும், மது வணிகம் ரூ.47 கோடி அதிகரித்திருக்கிறது என்பதன் மூலம் மது குடிக்காமல் இருக்க முடியாது என்ற நிலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது. தமிழகத்தில் இளைஞர்களை நிரந்தர குடிகாரர்களாக்கியது மட்டும்தான் திராவிட மாடல் அரசின் சாதனை.

ஒருபுறம் போதையின் பாதையில் யாரும் போகக் கூடாது; தீமை என்று தெரிந்தும் அதை விலை கொடுத்து வாங்கலாமா என்று தொலைக்காட்சி விளம்பரங்களில் முதல்வர் மு.க. ஸ்டாலின் முழங்கிக் கொண்டிருக்கிறார். இன்னொருபுறம் பொங்கல் திருநாளில் கூட மதுக்கடைகளை திறந்து வைத்து இளைஞர்களையும், மாணவர்களையும் மதுவுக்கு அடிமையாக்கி வருகிறார். இத்தகைய இரட்டை வேடத்தை மு.க.ஸ்டாலினைத் தவிர வேறு எவராலும் நடிக்க முடியாது.

கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தான் மது விற்பனை மிக அதிகமாக உயர்ந்திருக்கிறது என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளின் தேர்ச்சி விகிதத்தில் இந்த மாவட்டங்கள் தான் கடைசி இடத்தில் இருக்கின்றன. அந்த மாவட்டங்களை கல்வியில் உயர்த்துவதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்காத திமுக அரசு, அந்த மாவட்டங்களை மதுவில் மூழ்கடிப்பதில் தான் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. இதற்காக தமிழக ஆட்சியாளர்கள் வெட்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் மூலைக்கு மூலை கஞ்சாவும், மதுவும் தான் தாராளமாக கிடைக்கின்றன. அதனால் தமிழகம் சீரழிவை நோக்கி வேகமாக பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற இங்குள்ள மதுக்கடைகளை படிப்படியாக மூடி, மதுவிலக்கை ஏற்படுத்த வேண்டும். கஞ்சா புழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிடப்பில் மசோதாக்கள்; அரசின் செயல்பாடுகள் முடக்கம் ஆளுநரை சாடும் செல்வப்பெருந்தகை

சென்னை, ஜன.19

“தமிழக ஆளுநருக்கு அனுப்பப்பட்ட 12 மசோதாக்கள் கடந்த இரண்டு வருடங்களாக ஒப்புதல் தராமலும், எந்த முடிவும் எடுக்காமலும் முடக்கி வைத்திருக்கிறார்.



இத்தகைய மசோதாக்களில் உயர்கல்வித்துறை, சிலர் மீது வழக்கு தொடுக்க அனுமதி, சிறை தண்டனை குறைப்பு, அரசு ஆணைகளுக்கான ஒப்புதல் தராமல் நிலுவையில் உள்ளன. மேலும், பல்கலைக் கழகங்களுக்கு கடந்த மூன்று வருடங்களாக துணை வேந்தர்கள் நியமிக்கப்படாமல் உள்ள நிலையில் அதற்கான தேடுதல் குழுவுக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் காலம் தாழ்த்தி வருகிறார்” என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வப்பெருந்தகை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு எதிர்கட்சிகளால் ஆட்சிசெய்யப்படுகிற மாநிலங்களில் ஆளுநர்களின் போக்கு அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக தொடர்ந்து இருந்து வருகிறது. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு சட்டசபையில் மசோதாக்களாக நிறைவேற்றி ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பப்படுகின்றன. அப்படி தமிழக சட்டப்பேரவையால் அனுப்பப்பட்ட 12க்கும் மேற்பட்ட மசோதாக்கள் கடந்த மூன்று வருடங்களாக ஆளுநர் ஆர்.என். ரவியால் எந்த முடிவும் எடுக்கப்படாமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களை சட்டப்பேரவைக்குதிருப்பி அனுப்பப்பட்டு அவை மறுபடியும் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களை கடந்த 18 நவம்பர் 2023ல் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் போதே மசோதாக்களை முடக்குகிற நோக்கத்தில் ஆளுநர் முடிவெடுக்காமல் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டிருப்பது அப்பட்டமான காலம் தாழ்த்துகிற முயற்சியாகும்.

இந்நிலையில் தான் தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல்தராமல் காலம் தாழ்த்தி வருவதற்கு தீர்வு காண்கிற வகையில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடுத்தது. நேற்று அந்த வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதி ஜே.பி. பர்திவாலா தலைமையிலான அமர்வு ஆளுநரின் நடவடிக்கைகளுக்கு சம்மட்டி அடி கொடுத்திருக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் வாய்மொழி உத்தரவின்படி இன்னும் ஒரு வார காலத்துக்குள் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உச்ச நீதிமன்றமே அதுகுறித்து முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ஆர். என் ரவியை எச்சரித் திருக்கிறது.

ஏற்கெனவே, கடந்த ஆண்டு 10 நவம்பர் 2023ல் பஞ்சாப் அரசு ஆளுநருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் ஆளுநர் காலம் தாழ்த்த முடியாது, நியாயமான காலத்துக்குள் மசோதாக்களுக்கு ஒப்புதல் தர வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியது. அதேபோல, கேரள மாநில அரசு தொடுத்த வழக்கிலும் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அந்த தீர்ப்புகளில் அரசமைப்புச் சட்ட உறுப்பு 200ன்படி மாநில சட்டப்பேரவை நிறைவேற்றி அனுப்புகிற மசோதாக்களுக்கு உரிய காலத்தில் ஒப்புதல் தர வேண்டிய பொறுப்பு ஆளுநருக்கு இருப்பதை தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறது. இதனை மீறுகிற வகையில் தமிழக ஆளுநர் அரசியல் உள்நோக்கத்தோடு செயல்பட்டு வருவதை காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் பலமுறை கண்டனத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன.

ஆனால், தமிழகத்தில் பாஜகவின் ஒரு கிளையாக ஆளுநர் மாளிகையை மாற்றி தமிழக அரசுக்கு எதிராக அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு ஆளுநர் ஆர்.என். ரவி தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். தமிழக ஆளுநருக்கு அனுப்பப்பட்ட 12 மசோதாக்கள் கடந்த இரண்டு வருடங்களாக ஒப்புதல் தராமலும், எந்த முடிவும் எடுக்காமலும் முடக்கிவைத்திருக்கிறார். இத்தகைய மசோதாக்களில் உயர் கல்வித்துறை, சிலர் மீது வழக்கு தொடுக்க அனுமதி, சிறை தண்டனை குறைப்பு, அரசு ஆணைகளுக்கான ஒப்புதல் தராமல் நிலுவையில் உள்ளன.

மேலும், பல்கலைக் கழகங்களுக்கு கடந்த மூன்று வருடங்களாக துணை வேந்தர்கள் நியமிக்கப்படாமல் உள்ள நிலையில் அதற்கான தேடுதல் குழுவுக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் காலம் தாழ்த்தி வருகிறார். மேலும், பல்கலைக் கழக மானியக்குழுவை சேர்ந்த ஒருவர் தேடுதல் குழுவில் இடம் பெற வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார். இத்தகைய அரசமைப்புச் சட்ட விரோத நடவடிக்கைகளின் காரணமாக தமிழக அரசின் செயல்பாடுகள் முடக்கப்பட்டு வருகின்றன.


உலக பொதுமறை தந்த திருவள்ளுவருக்கு காவி உடை அணிய வைத்து 8 கோடி தமிழர்களை அவமதித்த குற்றத்தை ஆளுநர் ஆர்.என். ரவி செய்திருக்கிறார். இத்தகைய நடவடிக்கைகளின் மூலமாக தமிழக மக்களின் நலன்கள், உரிமைகளுக்கு எதிராகவும், பண்பாடு, கலாச்சாரத்தை சிறுமைப்படுத்துகிற வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிற ஆளுநர் ஆர்.என். ரவி அப்பதவியை வகிப்பதற்கு எந்த அருகதையும் இல்லாதவர்.

இத்தகைய தமிழக விரோத போக்கை கடைப்பிடித்து வருகிற ஆளுநர் ஆர்.என். ரவி அப்பொறுப்பிலிருந்து உடனடியாக அவர் விலக்கப்பட வேண்டும் என்பது தான் தமிழக மக்களின் ஒட்டுமொத்த கோரிக்கையாகும், என்று அவர் கூறியுள்ளார்.

## பரந்தூர் விமானநிலைய எதிர்ப்புக் குழுவினரை ஜன.20ல் சந்திக்க விஜய்க்கு அனுமதி

காஞ்சிபுரம், ஜன.19

பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிராகப் போராடும் குழுவினரை வரும் 20ம் தேதி சந்திக்க நடிகரும், தவெக தலைவருமான விஜய்க்கு காவல்துறை அனுமதி வழங்கியுள்ளது. இதனையடுத்து, விஜய் வருகையை ஒட்டிய பாதுகாப்புப் பணிகள் குறித்தும் அக்கட்சியினர் கள ஆய்வில் இறங்கியுள்ளனர்.



சென்னையின் 2வது விமான நிலையம் காஞ்சிபுரம் அருகே உள்ள பரந்தூரில் அமைகிறது. இதற்காக பரந்தூர் மற்றும் சுற்றியுள்ள 13 கிராமங்களில் இருந்து 5133 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இதற்காக பொதுமக்களின் விளை நிலங்கள், நீர் நிலைகள் என பல இடங்கள் கையகப்படுத்தப்பட உள்ளதால் பாதிக்கப்படும் மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர். ஏகனாபுரம் உள்ளிட்ட கிராமங்கள் முற்றிலுமாக கையகப்படுத்தப்படுவதால் அந்தப் பகுதிகளில் தீவிரமாக போராட்டம் நடத்தி வருகின்றனர். பொதுமக்களின் போராட்டம் 908 நாட்களாக நீடித்து வருகிறது. அந்த 13 கிராமங்களில் போலீஸார் குவிக்கப்பட்டு அந்த கிராமங்கள் போலீஸ் கட்டுக்குள் வந்தன.

போராட்டம் நடைபெறும் இடத்துக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் உள்பட பலர் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். விவசாய சங்கங்களும் ஆதரவு தெரிவித்தன.

**தவெக தலைவர் விஜய் ஆதரவு:** இந்நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தை தொடங்கிய நடிகர் விஜய் கடந்த அக்டோபர் 27ம் தேதி முதல் மாநாட்டை நடத்தினார். அப்போது பரந்தூர் விமான நிலையத்தை வேறு இடத்தில் அமைக்க வேண்டும் என்று போராடும் மக்களுக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றினார். இதற்கு விமான நிலைய எதிர்ப்பு போராட்டக் குழுவினர் நன்றி தெரிவித்தனர். விஜய்யை சந்திக்கவும் நேரம் கேட்டிருந்தனர்.

**சோர்ந்து போன மக்கள்:** போராட்டம் 900 நாளை தாண்டி நீடித்த நிலையில் பொதுமக்கள் சோர்ந்து போயினர். பல்வேறு கட்சி தலைவர்கள் ஆதரவு தெரிவித்து இருந்தாலும் அவர்கள் ஆதரவு சம்பிரதாயத்துக்கே இருப்பதாகவும், வலுவாக களத்தில் தங்களுடன் நிற்கவில்லை என்ற குறையும் பொது மக்கள் மத்தியில் இருந்தது. அரசும் போராட்டத்தை கண்டு கொள்ளாத நிலையில் 1000 நாட்கள் போராட்டம் நடத்தி நிறைவு செய்துவிடலாம் என்றும், அடுத்த கட்டமாக சட்ட நடவடிக்கை எடுக்கலாமா என்பது குறித்தும் ஆலோசனை நடத்தினர். இருப்பினும் விடா முயற்சியாக நிலம் அளவைக்கு எதிர்ப்பு, கருணாநிதி நினைவிடத்தில் மனு கொடுக்க முயற்சி, சட்டப்பேரவை முற்றுகையிட முயற்சி, ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி ஊர்வலம் என்ற பல்வேறு போராட்டங்களை பொதுமக்கள் மற்றும் போராட்டக் குழுவினர் நடத்தி வருகின்றனர். இதனால் பல வழக்குகளையும் சந்தித்துள்ளனர்.

**மீண்டும் சுறுசுறுப்பாகும் போராட்ட களம்:** இந்நிலையில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் போராடும் மக்களையும், போராட்டக் குழுவினரையும் சந்திக்க முடிவு செய்தார். இதற்காக காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்தனர். கடந்த சில தினங்களாகவே அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ஆனந்த் உள்ளிட்டோர் விஜய் வருகைக்கான ஏற்பாடுகளை கவனித்து வந்தனர். இந்நிலையில் விஜய் வருவதற்கு வரும் 20ம் தேதி அனுமதி காவல்துறை அனுமதி அளித்துள்ளது.

அம்பேத்கர் திடலில் கூட்டமா? இந்நிலையில் முழுமையாக கையகப்படுத்தப்படும் ஏகனாபுரம் கிராமத்தில் போராட்டக் குழுவினரையும், பொதுமக்களையும் விஜய் சந்திக்கிறார். இதில் 13 கிராமங்களில் இருந்து பாதிக்கப்படும் பொதுமக்கள், தமிழக வெற்றிக் கழகத்தினர் உள்பட பலர் பங்கேற்கின்றனர். இதற்காக ஏகனாபுரம் அம்பேத்கர் சிலை முன் உள்ள திடலில் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இடம் மட்டும் இன்று உறுதிப்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.சண்முகத்திடம் கேட்டபோது, “விஜய் வரும் 20ம் தேதி பரந்தூர் வர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எந்த இடத்தில் மக்களை சந்தித்து பேசுகிறார் என்பது குறித்து இன்று தெரிவிப்பதாக தெரிவித்துள்ளனர்.” என்றார்.

## கொல்கத்தா பயிற்சி மருத்துவர் கொலையில் சஞ்சய் ராய் குற்றவாளி அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு - ஜன.20ல் தண்டனை அறிவிப்பு

சீல்டா, ஜன.19

கொல்கத்தா ஆர்.ஜி.கார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி மருத்துவரை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில் சஞ்சய்ராய் குற்றவாளி என்று சீல்டா மாவட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தண்டனை விவரங்களை ஜன.20ம் தேதி அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளது.



மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பெண் பயிற்சி மருத்துவர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார். அவரது உடலில் 25 இடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், கழுத்து நெரிக்கப்பட்டதால் மூச்சு திணறி உயிரிழந்துள்ளார் என்றும் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இந்த வழக்கில் இன்று (ஜன.18) தீர்ப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய் ராய் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட பெண் மருத்துவரின் பெற்றோரும் நீதிமன்ற வளாகத்தில் இருந்தனர்.

நீதிபதி அனிர்பன் தாஸ் தனது தீர்ப்பில், சிபிஐ முன்வைத்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய் ராய் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. பிஎன்எஸ் பிரிவுகள் 64, 66 மற்றும் 103(1) இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி. இதற்கு அதிகபட்சமாக மரண தண்டனையும், குறைந்தபட்சமாக ஆயுள் தண்டனையும் இருக்கும் என்று அறிவித்தார்.

அப்போது, “நான் இதைச் செய்யவில்லை. இதைச் செய்தவர்கள், ஏன் கைது செய்யப்படவில்லை?” என்று சஞ்சய் ராய் நீதிமன்றத்தில் கூறினார்.

அக்டோபர் 7, 2024 அன்று இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர், சீல்டாவில் உள்ள கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் தினசரி விசாரணையை நடத்தியது. விசாரணை தொடங்கி 57 நாட்கள் நிறைவு பெற்ற நிலையில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

கொல்கத்தா பெண் பயிற்சி மருத்துவர் கூட்டு பாலியல் கொடுமைக்கு ஆளாகவில்லை. ஒரே குற்றவாளி சஞ்சய் ராய் என்று சிபிஐ ஆரம்பத்தில் இருந்து கூறி வருகிறது.

## ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சித் தலைவராக தேஜஸ்வி யாதவ் தேர்வு

பாட்னா, ஜன.19

ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவராக தேஜஸ்வி யாதவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஸியிஞ்) கட்சியின் தேசிய செயற்குழு கூட்டம் பாட்னாவில் இன்று (ஜன.18) நடைபெற்றது.




இதில், கட்சியின் தேசியத் தலைவர் லாலு பிரசாத் யாதவ், பிஹார் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், கட்சியின் மூத்த தலைவர்கள், நிர்வாகிகள், எம்எல்ஏக்கள், எம்பிக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில், இந்த ஆண்டு வர உள்ள பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் குறித்தும், கட்சியை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக செயற்குழு, தேஜஸ்வி யாதவை கட்சியின் தலைவராக நியமித்தது. தற்போது கட்சியின் தந்தையாக அவரது தந்தை லாலு பிரசாத் உள்ளார். கட்சிக்கு உள்ளும் வெளியிலும் தேஜஸ்வி யாதவின் செல்வாக்கு அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய தேஜஸ்வி யாதவ், “பிஹாரின் ஒவ்வொரு அரசியல் பிரச்சினைகள் குறித்தும் இந்த மாநாட்டில் நாங்கள் ஆழமாக விவாதிப்போம். இந்தக் கூட்டம் கட்சியின் எதிர் காலத்திற்கு மிகவும் முக்கியமானது. 2025 தேர்தலில் ஆர்ஜேடியின் வெற்றிக்கு கட்சி முழுமையாக தயாராக உள்ளது. எங்களின் ஒவ்வொரு முடிவும் முக்கியமானதாக இருக்கும். அமைப்பு மற்றும் தேர்தல்கள் குறித்த எங்கள் உத்தி மிகவும் உறுதியானதாக இருக்கும். ஆர்ஜேடி எந்த திசையில் நகர்கிறது என்பதை நாங்கள் நாட்டுக்கு காண்பிப்போம்” என தெரிவித்திருந்தார்.

# தாம்பரம் மாநகர இளைஞரணி சார்பில் பொங்கல் விழாவையொட்டி மாபெரும் கோலப்போட்டி






தாம்பரம் ஜன.19

தாம்பரம் மாநகர இளைஞரணிசார்பில் பொங்கல் விழாவையொட்டி மாபெரும் கோலப் போட்டி நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர இளைஞரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் மற்றும் சமத்துவ பொங்கல் விழா இரும்புலியூர் பகுதியில் தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் சர்தார் ஏற்பாட்டில் 4வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ் தலைமையில் மூன்று நாட்கள் மாபெரும் கோலப்போட்டி நடைபெற்றது அதனை தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ பங்கேற்று கோல போட்டியில் வெற்றி பெற்ற முதல் ஐந்து பேருக்கு பிரிட்ஜ், வாஷிங் மெஷின், டிவி, கிரைண்டர், மிக்ஸி, பட்டுப் புடவை மற்றும் 700 பேருக்கு பட்டுப் புடவையுடன் தட்டு ஆகியவற்றை வழங்கினார் உடன் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், மாவட்ட இளைஞரணி செயலாளர் கோல்டு டி.பிரகாஷ், தலைமை கழக பேச்சாளர்கள் எஸ்.ஜி.கருணாகரன், வேலு மணி, திமுக நிர்வாகிகள் சஞ் சீவி, ரத்தினகுமார், பாபு, பட்டு ராஜா, சிவக்குமார், விக்கி என்கின்ற யுவராஜ், தேவராஜ், மாநகர இளைஞர் துணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், சிவசுப்பிரமணியம், இன்சமாம், மற்றும் இலக்கியா செல்வி ராஜேஷ், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# பழனி திருக்கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்பு



பழனி, ஜன.19

பழனி திருக்கோவில் அறங் காவலர் குழு உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்ட ரும் பொறுப் பேற்று கொண்டனர். திருப்பூரை சேர்ந்த தொழிலதிபர் சுப்பிர மணி அறங்காவலர் குழு தலைவ ராக பதவி ஏற்றுக் கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி யில் அறுபடை வீடுகளில் மூன் றாம் படை வீடான பழனி முருகன் கோவில் அறங்காவலர் குழுவின ரின் பதவி காலம் நிறைவடைந் ததை அடுத்து புதிய அறங்காவ லர் குழுவிற்கு தமிழக இந்து சமய அறநிலையத்துறை சார்பில் புதிதாக 5நபர்கள் அறிவிக்கப் பட்டனர்.

திருப்பூரை சேர்ந்த தொழிலதி பர் சுப்பிரமணி, திண்டுக் கல் மாவட்டம் சின்னக்கரட்டுப் பட்டியை சேர்ந்த ஜி.ஆர்.பி.நெய் நிறுவன உரிமையாளர் ஜி.ஆர். பால சுப்ரமணியம், கதிரையன் குளத்தை சேர்ந்த கொம்பன் என்கிற சு.பாலசுப்ரமணி சேலம் மாவட்டம் புது அழகாபுரம் பகு தியை சேர்ந்த தனசேகர், ஒட்டன் சத்திரம் அருகே தும்மிச்சம் பட்டியை சேர்ந்த சி.அன்ன பூரணி, ஆகிய 5பேர் இடம்பெற் றனர்.

இவர்கள் 5பேரும் நேற்று முன் தினம் பழனி கோவில் தலைமை அலுவலகத்தில் அறங்காவலர் களாக பொறுப்பேற்று கொண் டனர். தொடர்ந்து தலைவராக திருப்பூரை சேர்ந்த தொழிலதிபர் சுப்ரமணி அறங்காவலர் குழு தலைவராக தேர்வு செய்யப்பட்டு பதவி ஏற்றுக்கொண்டார். மற்ற நான்கு பேரும் அறங்காவலர் குழு உறுப்பினர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர். இவர்களது பதவிகாலம் இன்றுமுதல் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

இந்நிகழ்வில் பழனி கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, உதவியாளர் லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சிவகங்கை மாவட்டத்திற்கு முதல்வரை வருகையை முன்னிட்டு வரவேற்கும் பேனர்கள் வைக்க திமுகவிற்கு தடை விதித்த அமைச்சர்




சிவகங்கை ஜன19

சிவகங்கை மாவட்டத்திற்கு ஜனவரி 21ம் தேதி காரைக்குடி யிலும் ஜனவரி 22ஆம் தேதி சிவகங்கைக்கும் வருகை தர இருக்கும் தமிழக முதல்வரை மு.க.ஸ்டாலின் வரவேற்பது குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நேற்று காரைக்குடியில் நடைபெற்றது. அப்போது அமைச்சர் தெரிவிக்கையில் முதல்வரை வரவேற்று சாலை களில் பேனர் கண்டிப்பாக வைக்கக் கூடாது மீறி வைத்தா லும் அகற்றப்படும் சாலைகளில் பேனர்கள் வைப்பதால் போக்கு வரத்து இடையூறு ஏற்படுகிறது சில சமயங்களில் விபத்து ஏற்படும் சூழ்நிலையும் உருவா கிறது இதனைத் தவிர்க்கும் வகையில் கண்டிப்பாக பேனர் வைக்க கூடாது என்று கண்டிப் புடன் அமைச்சர் தெரிவித்துள் ளார். மேலும் ஜனவரி 21ஆம் தேதி காரைக்குடியில் கட்சி நிர்வாகிகளை முதல்வர் சந்திக் கிறார் அக்கூட்டத்தில் 73 பேர் மட்டுமே பங்கேற்க அனுமதிக் கப்படுபவர் என திமுக நிர்வா கிகள் இடையே தகவல்கள் பேசப்பட்டு வருகிறது.

# திருச்செந்தூர் கடற்கரையில் கடல் அரிப்பைத் தடுக்க நீண்டகால தீர்வு காண முயற்சி: கனிமொழி எம்.பி. தகவல்



தூத்துக்குடி, ஜன.19

“திருச்செந்தூர் கோயில் கடற்கரையில் கடல் அரிப்பைத் தடுக்க வல்லுநர்களைக் கொண்டு நீண்ட கால தீர்வுக காண்பதற்காகத்தான் முயற்சிகள் நடந்து கொண்டி ருக்கிறது” என்று கனிமொழி எம்.பி. கூறியுள்ளார்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கடற்கரை பகுதியில் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தமிழக மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கனிமொழி எம்.பி. ஆகியோர் நேரில் பார்வையிட்டு இன்று (ஜன.18) ஆய்வு செய்தனர்.

பின்னர் கனிமொழி எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது: திருச்செந்தூர் முருகன் கோயிலை ஒட்டியுள்ள கடற் கரையில் தொடர்ந்து கால நிலை மாற்றத்தால் கடல் அரிப்பு ஏற்பட்டு வருகிறது. லட்சக்கணக் கான பக்தர்கள் கோயிலுக்கு வரும் நிலையில், கடல் அரிப்பு அச்சுறுத்தலையும், கடலோரங் களின் கரைப்பகுதி குறைந்து கொண்டே வருவதையும், அமைச்சர்கள், துறை சார்ந்த உயர் அலுவலர்கள் ஆய்வு செய்தோம்.

இதற்கு நிரந்தரமான ஒரு தீர்வை உருவாக்கி தர வேண்டும். அந்தவகையில், இந்தாண்டு நடைபெறவுள்ள இத்திருக்கோயிலின் கும்பாபி ஷேகத்துக்கு முன்பாக அதற் கான பணிகளை விரைந்து முடிப்பதற்கு துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் ஐஐடி வல்லுநர்களை கொண்டு நிரந்தர தீர்வு ஏற்படுத்த திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. அதனை தமிழக முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்று ஆலோசித்து தேவையான நிதி ஒதுக்கீடு பெற்று கடல் அரிப்பை தடுப்பதற்கான நிரந்தர தீர்வை முதல்வர் அறிவிப்பார்.

கரை ஒதுங்கிய சிற்பங்கள் வரலாற்று சிறப்புமிக்க சிற்பங் களாக இருந்தால் நிச்சய மாக அவற்றை பாதுகாப்ப தற்கு முயற்சிகள் மேற்கொள் ளப்படும். கடல் அரிப்பு என்பது தமிழகத்தில் மட்டும் நடக்க வில்லை. உலகம் முழுவதும் இருக்கக்கூடிய கடற்கரை பகுதி களில் மண் அரிப்பு அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. இது அனைத்து இடங்களிலும் நடந்து கொண்டிருக்க கூடிய பிரச்சினைதான். இதற்கான தீர்வை அனைத்து இடங்களிலும் எந்த அரசாலும் உருவாக்க முடியாது.

மிக அதிகளவில் பாதிக்கப் படக்கூடிய இடங்களை கண்ட றிந்து அவற்றை பாதுகாக்க முதல்வர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். நீண்ட கால தீர்வுகளுக்காகத் தான் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. திமுக அரசு போல் காலநிலை மாற்றத் தையும் அதனால் வரக்கூடிய விளைவுகளையும் புரிந்து கொண்டு செயல்படக்கூடிய ஆட்சி வேற எதுவும் இருக்க முடியாது. திருச்செந்தூர் புறவழிச்சாலை பணிகள் விரைவு படுத்தப்பட்டு கும்பாபிஷேகத் துக்கு முன்பாக தொடங்கப் படும். இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலை யங்கள் துறை அரசு முதன் மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சியர், க.இளம்பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, திருக்கோயில் இணை ஆணை யர் எஸ்.ஞானசேகரன், உள் ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

# குலசேகரம் அரசு தாலுகா மருத்துவமனையினை கன்னியாகுமரி ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, ஜன.19

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் அரசு தாலுகா மருத்துவமனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகு மீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக் கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப் படும் வரும் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 30வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவருக்கும் மார்பக கர்ப்ப வாய் புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட வேண்டும். அவ் வாறு பரிசோதனை மேற்கொள் ளப்படும் போது புற்றுநோய் அறிகுறி கண்டறியப்படும் நோயாளிகளுக்கு உடனடியாக சிகிட்சை தொடங்க வேண்டும். அந்த நோயாளிகள் களப்பணி யாளர்களால் தொடர்ந்து கண் காணிக்கப்பட வேண்டும் என்று மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அறிவுறுத்த பட்டது.

மகப்பேறு சிகிச்சை பிரிவில் Ultrasound Sound Scan Machine உடனடியாக செயல்பட நடவடிக்கை மேற்கொள்ள துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தபட்டது. தொடர்ந்து மருத்துவமனையில் அனும திக்கப்பட்டுள்ள உள்நோயா ளிகளை சந்தித்து அவர்களின் உடல்நலம் மற்றும் சிகிட்சை முறைகள் குறித்து கேட்டறியப் பட்டது. ஆஸ்துமா மற்றும் மூச்சு திணறலால் அவதிப்படும் உள்நோயாளிகளின் பரி சோதனை விவரங்கள் கேட்ட றியப்பட்டதோடு, ஸ்கேன் சேவைகள் ஆய்வக பரிசோ தனை வசதிகள் உள்ளிட்டவை கள் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

மருத்துவமனை கட்டிடத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில், அருகில் இருக்கும் மரங்களை உடனடியாக அகற்ற அறிவு றுத்தப்பட்டதோடு, புதிய கட்டிட பணிகள் ஒரு வாரத்திற்குள் தொடங்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது. உள்நோயாளிகளுக்கு வழங் கப்படும் உணவின் தரம் பரிசோ தனை செய்யப்பட்டது. மேலும் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளிடம் அக்கறையு டனும், பரிவுடனும் நடந்து கொண்டு சிகிச்சை அளிக்கு மாறு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகு மீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் தலைமை மருத்துவர் (பொ) மரு.மிலிங்டோனியா, மரு. தமிழரசன், குழந்தை நல மருத்துவர் மரு.சுதாகர்;, நர்சிங் கண்காணிப்பாளர் மேபல், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் உள்ளார்கள்.

# வேலூரில், கோட்டை பின்புறம் ஜெயின் கோசலா மாட்டுப் பண்ணையில், மாட்டுப் பொங்கல் திருவிழா



வேலூர் ஜன19

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி, நவநீத அம்மன் கோயில் தெரு, கோட்டை பின் புறம் (மேற்கு), பாரதியார் சாலையில் ஜெயின் கோசலா மாட்டுப் பண்ணையில், மாபெரும் மாட்டுப் பொங்கல் திருவிழா ஜெயின் கோசாலா அறக்கட்டளைத் தலைவர் விமல் சந்த் ஜெயின் தலைமையிலும், செயலாளர் தர்மராஜ், அறங் காவலர் ருக்ஜி ராஜேஷ் முன்னி லையில் மாபெரும் மாட்டுப் பொங்கல் திருவிழா நடை பெற்றது.

இவ்விழாவில் ஜெயின் கோசாலா நிர்வாக குழுவினர் களுடன் அலங்கரிக்கப்பட்ட அனைத்து மாடுகளுக்கும் சிறப்பு பூஜைகள் செய்து, சாம்பிராணி புகை மனத்துடன், கற்புரம் ஆர்த்தி காண்பித்து மலர்கள் தூவி வணங்கி வழிபட் டனர். இதனைத் தொடர்ந்து மாடுகளுக்கு பழங்கள், கரும்புகள், தீவனப்பயிர்கள், அகத்திக்கீரை, பொங்கல் என அனைத்து மாடுகளுக்கும் பல்வேறு விதமான பழங்கள் மற்றும் தீவனப் பயிர்களை உணவாக வழங்கினர். இம் மாட்டுப் பொங்கல் திருவிழா வில் ஜெயின் குழுவின் குடும்பங்கள், சமூக ஆர்வ லர்கள், தன்னார்வலர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு மாட்டுப் பொங்கல் திருவிழாவை சிறப்பித்து

மகிழ்ந்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருந்தது. இறுதியில் ஜெயின் கோசாலா குழுவின் சார்பில் இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரி வித்து மாட்டுப் பொங்கல் திருவிழா நிறைவுபெற்றது.

# தேமுதிக மேற்கு பகுதி சார்பில் சார்பில் எம்ஜிஆர் பிறந்தநாளை முன்னிட்டுஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



தாம்பரம் ஜன19

தேமுதிக மேற்கு பகுதி சார்பில் சார்பில் எம்ஜிஆர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி தாம்பரம் பேருந்து நிலைய அருகே எம்ஜிஆர் பிறந்த நாளை முன் னிட்டு தாம்பரம் மாநகர மேற்கு பகுதி தேமுதிக சார்பில் தாம்பரம் மாநகர மேற்கு பகுதி செயலா ளர் மார்க்கெட் ஞானப்பால் அவர்களின் தலைமையில் இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்டம் துணைச் செயலாளர் மா.செழியன் அவர்கள் கலந்து கொண்டு எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்

இந்த நிகழ்ச்சியில் மத்திய பகுதி கழகச் செயலாளர் என்.ஆர்.ஆனந்தன், மேற்கு பகுதி பொருளாளர் ஜார்ஜ், 49வது மகளிர் அணி செயலாளர் செல்வி, மத்திய பகுதி துணைச் செயலாளர் சக்திவேல் கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு எம்ஜிஆர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி னார்கள்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, 18.01.2025 அன்று பொதுவுடமை வீரர் ப.ஜீவானந்தம் அவர்களின் 62 வது நினைவு நாளையொட்டி, நாகர்கோவில் வேப்பமூடு பகுதியில் அமைந்துள்ள பொதுவுடமை வீரர் ப.ஜீவானந்தம் மணி மண்டபத்தில், அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி உட்பட பலர் உள்ளார்கள்.

# ஜன.21ல் மதுரை மாநகராட்சி மண்டலம் 4ல் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்

மதுரை, ஜன.19

மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு வாரந்தோறும் ஒவ்வொரு செவ்வாய்கிழமை வார்டு மறுவரையறை செய்யப்பட்ட ஐந்து மண்டலங்களுக்கு அந்தந்த மண்டல அலுவலகங்களில் குறைதீர்க்கும் முகாம் நடைபெற உள்ளது.

அதன்படி எதிர்வரும் 21.01.2025 (செவ்வாய்கிழமை) சி.எம்.ஆர். ரோட்டில் உள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு) அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் தலைமையில் நடைபெற உள்ளது. இம்முகாமில் ஆணையாளர், துணை மேயர், மண்டலத் தலைவர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

(மண்டலம் 4 (தெற்கு) உட்பட்ட வார்டு பகுதிகள்: வார்டு எண்.29, செல்லூர், வார்டு எண்.30 ஆழ்வார்புரம், வார்டு எண்.41 ஐராவதநல்லூர், வார்டு எண்.42 காமராஜர் சாலை, வார்டு எண்.43 பங்கஜம் காலனி, வார்டு எண்.44 சேர்மன் முத்துராமய்யர் ரோடு, வார்டு எண்.45 காமராஜபுரம், வார்டு எண்.46 பழைய குயவர்பாளையம், வார்டு எண்.47 சின்னக்கடை தெரு, வார்டு எண்.48 லெட்சுமி புரம், வார்டு எண்.49 காயிதே மில்லத் நகர், வார்டு எண்.53 செட்டியூரணி, வார்டு எண்.85 கீழவெளிவீதி, வார்டு எண்.86 கீரைத்துறை, வார்டு எண்.87 வில்லாபுரம் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, வார்டு எண்.88 அனுப்பானடி, வார்டு எண்.89 சிந்தாமணி, வார்டு எண்.90 கதிர் வேல் நகர் ஆகிய வார்டுகள்)

இந்த குறைதீர்க்கும் முகாமில் பொதுமக்கள் குடிநீர், பாதாள சாக்கடை இணைப்பு, வீட்டு வரி பெயர் மாற்றம், புதிய சொத்து வரி விதிப்பு, கட்டிட வரைபட அனுமதி, தெருவிளக்கு, தொழில்வரி உள்ளிட்ட தங்கள் கோரிக்கை மனுக்களை கொடுத்து பயன்பெறுமாறு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# கன்னியாகுமரி மாவட்ட அளவிலான சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்

கன்னியாகுமரி, ஜன.19

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து நடத்தும் மாவட்ட அளவிலான சிறப்பு வேலை வாய்ப்பு முகாம் நாளை 18.01.2025 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் சார்ந்த மாவட்டங்களைச் சார்ந்த Prochant India, Althi Solutions, Mikan Engineering And Construction Pvt Ltd, Jonyjo Digital And Offset Printing Press Pvt Ltd, Spaceman Craft Private Limited, Capecom Engineering Private Limited, Jps Lift And Escalators Pvt Ltd, Sri Sainath Green Power Pvt, Webglits Technologies Pvt Ltd, Equalhire Logitech India Pvt Ltd, Mithra Knowledge Center, Ison Xperiences, Cabocab, Enthu Tech, Senthuraa Technologies Pvt Ltd உள்ளிட்ட 15 நிறுவனங்கள் இந்த சிறப்பு முகாமில் கலந்துகொள்ள உள்ளது.

கன்னியாகுமரிமாவட்டத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் மற்றும் வேலை தேடுவோர் இந்த முகாமில் கலந்துக் கொள்ளலாம். இந்த முகாம் சென்னை, பெங்களூர் போன்ற பெரு நகரங்களில் பெறும் அளவிலான வாய்ப்புகளை மாவட்டத்திலேயே உருவாக்குவதே இந்த முயற்சியின் நோக்கமாகும். அதற்கான சிறப்பு முயற்சியாக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேலை தேடுவோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மாணவ மாணவியர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள்.

# பெரியகுளத்தில் எம்.ஜி.ஆர் 108வது பிறந்தநாள் விழா



பெரியகுளம் ஜன.19

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 108 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தேனி (கி) மாவட்டம் பெரியகுளம் (மே) ஒன்றியத்துக்குட்பட்ட தாமரைக்குளம் பேரூர் கழகம் 12 வது வார்டு பகுதியில் வார்டு செயலா ளர் ஜாகிர் உசேன் ஏற்பாட்டில் எம்.ஜி.ஆரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்வில் தாமரைக்குளம் அஇஅதிமுக பேரூர் கழக செயலாளர் மனோகரன்,13 வது வார்டு செயலாளர் ராஜா உள்பட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தாமரைக்குளத்தில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் பிறந்தநாள் கொண்டாட்டம்



பெரியகுளம் ஜன.19

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தாமரைக்குளம் பேருந்து நிறுத்தத்தில் தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் 108 வது பிறந்தநாள் விழா தாமரைக்குளம் அஇஅதிமுக பேரூர் கழக செயலாளர் மனோகரன் தலைமையில் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்வில் மாநில பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் அப்பாஸ் மைதீன், தாமரைக்குளம் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் தண்டபாணி, பேரூர் கழக அவைத் தலைவர் நாராயணன், பொருளாளர் பழனிச்சாமி, கவுன்சிலர் பாலமுருகன், கழக நிர்வாகிகள் தியாகராஜன், ராமலிங்கம், மயில்வேல், செல்லையா, ஜாகிர் உசேன், ராஜா, நடராஜன், லட்சுமணன், அய்யனார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட காணி இன பழங்குடியின மக்களுடன் கலந்துரையாடிய மாவட்ட ஆட்சியர்



கன்னியாகுமரி, ஜன.19

கன்னியாகுமரி மாவட்ட பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட எட்டாங்குன்று மலைபகுதியில் காணி இன பழங்குடியின மக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் சந்தித்து, கலந்துரையாடி தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு அரசின் அனைத்து திட்டங்களும் நலத்திட்ட உதவிகளும் கடைகோடி மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் பல்வேறு முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் பழங்குடியினர்களுக்கு வன உரிமை பட்டா வழங்குவது தொடர்பாக அந்தப்பகுதி மக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்து, அதற்கு தீர்வு காணும் வகையில்; தோட்டமலை, மாறாமலை, எட்டாம் குன்று, வளையம் தூக்கி உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த மக்களுடன் எட்டாங்குன்று குடியிருப்பில் வைத்து கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வன உரிமை சட்டத்தின் கீழ் நில உரிமை வழங்கப்படும் என்றும் அதற்கு அரசு தயாராக இருக்கிறது என்றும் வரும் நிதியாண்டில் இப்பகுதி மக்களுக்கு அதிகமான அளவில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

மேலும் தகுதியுள்ள நபர்களுக்கு வன உரிமை பட்டா வழங்குவதற்கு கிராம சபாக்களும் பொதுமக்களும் கோட்ட அளவிலான கமிட்டி உறுப்பினர்களும், மாவட்ட அளவிலான கமிட்டி உறுப்பினர்களும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே கிராம சபாக்களும் கோட்ட மற்றும் மாவட்ட கமிட்டி உறுப்பினர்களும் தகுந்த ஒத்து ழைப்பு வழங்குவதாக தெரிவித்தார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கனகராஜ், ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அனில்குமார், திருவட்டார்; வட்டாட்சியர் கந்தசாமி, திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர், வனத்துறை அலுவலர்கள், வன உரிமைச் சட்ட கோட்ட மற்றும் மாவட்ட அளவிலான உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மதுரை, உலகத் தமிழ்ச் சங்கமும் திண்டுக்கல், வளர் தமிழ் ஆய்வு மன்றம் சார்பில் பன்னாட்டுக் கருத்தரங்கு




மதுரை, ஜன.19

மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் திண்டுக்கல், வளர் தமிழ் ஆய்வு மன்றமும் புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழும் இணைந்து உலகத் தமிழ்ச் சங்கக் கூட்ட அரங்கில் 21ஆவது பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை நடத்தின. இக்கருத்தரங்க நிகழ்வில் வளர் தமிழ் ஆய்வு மன்றத்தின் செயலாளர் முனைவர் சி. மைக்கேல் சரோஜினி பாய் வரவேற்புரையாற்றினார்.

வளர் தமிழ் ஆய்வுமன்றத்தின் தலைவர் முனைவர் தாயம்மாள் அறவாணன் தலைமையேற்று உரையாற்றினார். உலகத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் இயக்குநர் (பொ) முனைவர் க. பசும்பொன் தொடக்கவுரை யாற்றிச் சிறப்பித்தார். அவர் தம் உரையில், “தமிழ் மொழி ஈடு இணையற்ற மொழி. உலக நாடுகள் பலவற்றில் தமிழர்கள் பரவி வாழ்ந்து வரும் சூழலில் அந்தந்த நாடுகளில் தங்கள் தாய்மொழியைத் தக்க வைக்க பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர். மொரிசியஸ், ரீயூனியன், ஃபிஜி உள்ளிட்ட பல நாடுகளில் மொழிக்கலப்பு உண்டாகி பிட்யின் என்ற புதிய மொழி உருவாகிறது. மொரிசியஸ் தமிழர்கள் ‘கிரியோல்’ என்ற மொழியினைத் தங்கள் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலை வேறு நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு வரக்கூடாது. அயலகத் தமிழர்களுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வருகின்றது. அங்கு வாழும் தமிழர்களும் மிகச் சிறப்பாக மொழி வளர்ச் சிக்கு பங்களிப்பாற்றி வருகின்றனர். வளர் தமிழ் ஆய்வு மன்றமும் உலகத் தமிழ்ச் சங்கமும் இதைப் போன்ற கருத்தரங்கத்தினை முன்னெடுப்பது பாராட்டிற்குரியது” என்று குறிப்பிட்டார்.

வளர் தமிழ் ஆய்வுமன்றத்தின் துணைத் தலைவர் மருத்துவர் ஜெ. அமலாதேவி வாழ்த்துரை வழங்கினார். அருள்மிகு மீனாட்சி அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சூ. வானதி சிறப்புரையாற்றிச் சிறப்பித்தார். கடந்த ஆண்டு நடத்தப்பெற்ற கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளில் சிறந்த கட்டுரைகள் தெரிவு செய்யப்பெற்று இராமநாதபுரம், அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் சு. முத்துஇலக்குமி அவர்களாலும் மதுரை, பாத்திமா கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. பொன்னி அவர்களாலும் பரிசுகள் வழங்கப்பெற்றன. நிகழ்வில் 85 கட்டுரைகள் அடங்கிய கட்டுரைத் தொகுப்பு புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழின் சிறப்பிதழாக வெளியீடு செய்யப்பெற்றது. வளர் தமிழ் ஆய்வு மன்றத்தின் துணைச் செயலாளர் முனைவர் ர. கோரிஜான் கருத்தரங்கத்தினை ஒருங்கிணைத்தார். உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வு வளமையர் முனைவர் ஜ. ஜான்சிராணி நன்றியுரை ஆற்றினார்.

இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டுரையாளர்கள் பங்கேற்று, பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளை வாசித்தளித்தனர். தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

# செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் எம்ஜிஆர் பிறந்தநாள் கிரிக்கெட் போட்டி





தாம்பரம் ஜன.19

எம்.ஜி.ஆரின் 108 வது பிறந்தநாளை முன்னிட்டு செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு செயலாளர் கே.பி.காசி ராஜபாண்டியன் தலைமையில், மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை பொருளாளர் ஆர்.சங்கர் கணேஷ் ஏற்பாட்டில் மேற்கு தாம்பரம் இரும்புலியூர் டி.டி.கே மைதானத்தில் நடைபெரும் மாபெரும் இரண்டு நாள் கிரிக்கெட் தொடர் போட்டியை, மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் துவக்கிவைத்தார். உடன் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா, மாவட்ட துணை செயலாளர் ப.தன்சிங், மாவட்ட அவைத் தலைவர் எ.எம்.பொன்னுசாமி, பகுதி செயலாளர்கள் எல்லார் செழியன், எம்.கூத்தன், ஏ.கோபிநாதன், இரா.மோகன், த.ஜெயபிரகாஷ், காஞ்சி மண்டல தகவல் தொழிநுட்பப் பிரிவு இணை செயலாளர் எம்.சபரீஷ் மணிகண்டன், மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை தலைவர் சி.பி.ஜெயதீப், இணைச்செயலாளர் பி.விஷ்ணு வரதன், மாவட்ட வர்த்தகப் பிரிவு துணைத்தலைவர் எம்.ஹேமந்த் குமார், சந்திரசேகர் ராஜா, வட்டச் செயலாளர் வெற்றி செல்வன் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி சாமி தோப்பு தலைமைப் பதியில் தைத்திருவிழா ஆரம்பம்





கன்னியாகுமரி ஜன 19

கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பு தலைமை பதி 11 நாட்கள் நடைபெறும் தைத்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தனம் தொடங்கியது.

கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பு அய்யா வைகுண்ட சுவாமி தலைமை பதியில் தைத் திருவிழா நேற்று முன் தினம் காலை 6.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் துவங்கியது தலைமை பதி தலைமை குரு பாலா ராஜா பதி அடிகளார் திரு கொடியேற்றி விழாவை துவக்கி வைத்தார்

இரண்டாம் நாளான நேற்று இரவு ஐயா மயில் வாக னத்தில் பவனி வருதல் அன்ன வாகனத்தில் வெள்ளை சாட்சி வீதி வலம் வருதல் நடந்தது வரும் 24ஆம் தேதி எட்டாம் திருவிழாவில் குதிரை வாக னத்தில் முத்திரை கிணற்றின் கரையில் கலிவேட்டையாடுவ தால் தொடர்ந்து பல காதலுக்கு குதிரை வாகனத்தில் சென்று பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் நிகழ்ச்சி அதைத் தொடர்ந்து இரவு 11 மணிக்கு வடக்கு வாசலில் ஐயா தவகுளத்தில் காட்சி தரும் நிகழ்வு அதனைத் தொடர்ந்து அன்ன தர்மம் நடக்கவிருக்கிறது.

பத்தாம் திருவிழா 26 ஆம் தேதி இரவு 11 மணிக்கு இந்திர விமான வாகன பவனி பதினோராம் திருவிழாவான 27ஆம் தேதி மதியம் 12 மணிக்கு தேரோட்டம் நடைபெற இருக்கிறது அண்டிரவு 12 மணிக்கு ஐயா காலை வாகனத்தில் பவனி வரும் நிகழ்ச்சி நடக்க இருக்கிறது தொடர்ந்து திருக் கொடி இறக்கவும் நடக்க இருக்கிறது திருவிழாவை முன்னிட்டு தினம்தோறும் சிறப்பு பணிவிடைகள் உச்சி படிப்பு உகப்படிப்பு வாகன பவனி மற்றும் அய்யா வைகுண்டர் கலையரங்கத்தில் தினமும் அய்யாவழி சமய சொற்பொழிவு கலை நிகழ்ச்சிகள் நடக்க இருக்கிறது

## பெரியகுளம் அஇஅதிமுக தென்கரை பேரூர் கழகம் சார்பில் எம்.ஜி.ஆர் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்





பெரியகுளம் ஜன.19

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 108 வது பிறந்தநாள் விழா தேனி (கி) மாவட்டம் பெரியகுளம் (மே) ஒன்றியத்திற்குட்பட்ட அஇஅதிமுக தென்கரை பேரூர் கழக செயலாளர் ஆண்டவர் தலைமையில் தெ. கள்ளிப்பட்டி முத்தையா கோவில் திடல், முத்தாலம்மன் கோவில் திடல், கம்பம் சாலை, கைலாசபட்டி ஆகிய இடங்களில் கழக கொடி யேற்றி, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்வில் பெரியகுளம் (கி) ஒன்றிய செயலாளர் ராஜகுரு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியவீரன், மாநில பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் கழகத்தின் போர் வாள் அப்பாஸ் மைதீன், தாமரைக்குளம் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் தண்டபாணி, மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் பாப்பா இளமுருகன், மாவட்ட பிரதிநிதிகள் பாண்டியம்மாள், முனியாண்டி, முத்துப்பாண்டி பேரூர் கழக அவைத் தலைவர் ராஜாமணி, இணைச்செயலாளர் பஞ்சம்மாள், துணைச் செயலா ளர்கள் நாச்சம்மாள், முருகன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க நிர்வாகி கல்லுபோத் குமார், வார்டு கழக செயலாளர்கள் பிச்சை, ராஜ், சுகுமாரன், சங்கர், பெரியசாமி, அறிவழகன், கார்த்திக், தென்கரை பேரூர் கழக தகவல் தொழில்நுட்ப நிர்வாகி முருகேசன், வார்டு பிரதிநிதிகள் கருப்பணன், சுக்குலான், முத்துமணி, கண்ணன் உள்பட நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு முன்னதாக தெ.கள்ளிப்பட்டி முத்தையா கோவில் திடலில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஸ்போக்கன் இங்கிலீஷ் புத்தகம், பேனா மற்றும் பொங்கல் வழங்கப்பட்டது.

## திருநெல்வேலியில் வர்த்தக வாகனங்களுக்காக புதுமையான பொங்கல் அழகு போட்டி!



திருநெல்வேலி, ஜன 19

இந்தியாவில் அதிகம் மதிக்கப்படும் வங்கிசாரா நிதி நிறுவனங்களுள் (NBFC) முதன்மை வகிக்கும் சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க முதன்மை பண்டிகையான பொங்கல் திருநாளையொட்டி வர்த்தக வாகனங்களுக்கான 2025 பொங்கல் அழகு போட்டியை திருநெல்வேலி நகரில் சிறப்பாக நடத்தியது.

ஆட்டோமோட்டிவ் வாகனங் களுக்கான கடன் வழங்கல், பொதுகாப்பீடு, வீட்டுக்கடன்கள் மற்றும் சொத்து மேலாண்மை ஆகிய பிரிவுகளில் தீவிரமாக ஈடுபட்டு வரும் இந்நிறுவனம், வாடிக்கையாளர் நல்லுறவை வலுப்படுத்துவதற்கான இந்த புதுமையான போட்டியின் வெற்றியாளர்களை இன்று அறிவித்தது. மிக நன்றாக பராமரிக்கப்படுகிற, தூய்மை யான மற்றும் சிறப்பாக அலங் கரிக்கப்பட்ட டிராக்டரை தேர்வு செய்து கவுரவிக்கிற போட்டியாக இது நடத்தப்பட்டது.

சுந்தரம் சங்கமம் என்ற பெயரில் நடைபெற்ற இந்நிகழ் வில் 38 டிரக் உரிமையாளர்கள் உற்சாகத்தோடும், ஆர்வத் தோடும் பங்கேற்றனர். சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட 22 டிரக்குகள் இப்போட்டியில் கலந்துகொண்டன. மூன்று நடுவர்கள் இந்த டிராக்டர்களை மதிப்பாய்வு செய்து அவைகளுள் முதன்மையான மூன்று டிராக்டர்களை தேர்வு செய்தனர். சிறப்பாக பராமரிக்கப்பட்ட, தூய்மையான மற்றும் அழகாக அலங்கரிக்கப்பட்ட இந்த டிராக்டர்களின் உரிமை யாளர்களுக்கு சுந்தரம் பைனான்ஸ் வழங்கிய பரிசுகள் விநியோகிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வர்களுள் பெரும்பான்மை யானோர் விவசாய சமூகத் தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது சுந்தரம் பைனான்ஸ்ன் டிராக்டர்க்கான நிதியுதவி நடைமுறை குறித்தும் மற்றும் முக்கியமான காமதேனு செயல்திட்டம் குறித்து நிறுவன அதிகாரிகள் விளக்கிக் கூறினர். தாழையூத்து காவல் நிலை யத்தின் ஆய்வாளர் சொரிமுத்து இந்நிகழ்வின் சிறப்பு விருந் தினராக பங்கேற்றார்.

மகிழ்ச்சியும், உற்சாகமும் நிறைந்த சூழலில் வாடிக்கை யாளர்களிடம் கலந்துரையாடி நல்லுறவை வளர்ப்பதற்காக பொங்கலையொட்டி இந்நிகழ்வு நடத்தப்பட்டது. அத்துடன், கேபின் அமைவிடம் உட்பட தங்களது வாகனங்களை பாதுகாப்புடனும், தூய்மை யாகவும் உயர்தரநிலைகளில் பராமரிக்கிற டிராக்டர் உரிமை யாளர்களை அங்கீகரித்து கவுரவிப்பதும் இந்நிகழ்வின் நோக்கமாகும். தங்களது டிராக்டர்களை அழகாக அலங் கரித்து தனித்துவ அடையாளத் தோடு போட்டியில் விவசாயிகள் கலந்துகொண்டது இந்நிகழ்வின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாகும்.

ஜனவரி 1ம் தேதி முதல் 31ம் தேதி வரை கடைபிடிக்கப்படும் "தேசிய சாலை பாதுகாப்பு மாதம்" 2025 நிகழ்வையொட்டி தமிழ்நாடு மாநிலத்தின் பல் வேறு அமைவிடங்களிலும் "சுந்தரம் சங்கமம்" நிகழ்வு நடத்தப்படுகிறது.

## நாலுமாவடியில் மாநில மின் ஒளி கபடி போட்டி இயேசு விடுவிக்கிறார் சகோதரர் மோகன் சி.லாசரஸ் தொடக்கி வைக்கிறார்



தூத்துக்குடி ஜன.19

தூத்துக்குடி மாவட்டம் குரும்பூர் அருகேயுள்ள நாலுமாவடியில் அமைந்துள்ள இயேசு விடுவிக்கிறார். அமைப் பின் சார்பில் மாநில அளவில் மின் ஒளி கபடிப் போட்டி நடைபெறுகின்றது வருகிற 22ந் தேதி கல்லூரி மாணவ மாணவிகளுக்கான மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டிகளை சகோதரர் மோகன் சி.லாசரஸ் தொடங்கி வைக்கிறார். இந்த மாபெறும் மின் ஒளி கபடி போட்டியினை

நாலுமாவடி இயேசு விடு விக்கிறார் ஊழியத்தின் விளை யாட்டுத் துறை மற்றும் தூத்துக்குடி மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் தமிழர் திருநாளை முன்னிட்டு 8வது ரெடீமர்ஸ் கோப்பைக்கான கல்லூரி மாணவ மாணவி களுக்கு இடையேயான மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டிகள், நாலுமாவடி காமராஜர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் வைத்து வருகிற ஜனவரி 22ந் தேதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு தொடங்கி 23ந் தேதி வியாழக்கிழமை வரை 2 நாட்கள் நடக்கிறது.

இப்போட்டியை இயேசு விடுவிக்கிறார் ஊழிய நிறுவனர் மோகன் சி.லாசரஸ் தலைமை வகித்து ஜெபித்து தொடங்கி வைக்கிறார். இப்போட்டியானது சர்வதேச தரத்தில் மேட் தளத் தில் நடைபெறுகிறது.

இப்போட்டிகளில் தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரி அணிகள் கலந்து கொள்கின்றன. போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசு 40 ஆயிரம் ரூபாயும், 2ம் பரிசு ரூ.30 ஆயிரம் ரூபாயும், 3 மற்றும் 4ம் பரிசாக 20 ஆயிரம் ரூபாயும் வெற்றிக் கோப்பைகளும் வழங்கப்படுகிறது.

இதில் 6 சிறந்த ஆட்டக்காரர் களுக்கும் சிறப்பு பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் போட்டியைக் காண வரும் பார்வையாளர்களில் 35 பேர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு பரிசுகள் வழங்கப்படுகிறது.

இப்போட்டிகளுக்கான ஏற்பாடு களை நாலுமாவடி இயேசு விடுவிக்கிறார் ஊழிய நிறு வனர் மோகன் சி.லாசரஸ் தலைமையில் பொதுமேலாளர் செல்வக்குமார், விளையாட்டு துறை ஒருங்கிணைப்பாளர்கள் ஒலிம்பிக் போட்டியில் அர்ஜுனா விருது பெற்ற தமிழகத்தின் தலைசிறந்த கபடி வீரார்மணத்தி கணேசன், மற்றும் எட்வின், இயேசு விடுவிக்கிறார் மக்கள் தொடர்பு அலுவலர் சாந்தகுமார் மற்றும் ஜெபக்குழுவினர் செய்து வருகின்றனர்.

## இந்திய செஞ்சிலுவை சங்கம் காளையார்கோவில் கிளை சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கல்



காளையார் கோவில் ஜன19

இந்திய செஞ்சிலுவை சங்கம் காளையார்கோவில் கிளை சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத் தில் இந்திய செஞ்சிலுவை சங்கம் காளையார்கோவில் கிளை சார்பாக நலத்திட்ட உதவிகள் காளையார்கோவில் அரசு மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்திய செஞ்சிலுவை சங்க காளையார்கோவில் கிளைச் சேர்மன் தெய்வீக சேவியர் தலைமை வகித்து தலைமை உரையாற்றினார். இந்திய செஞ்சிலுவை சங்க சிவகங்கை கிளைச் சேர்மன் சுந்தரராமன் காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் முனைவர் சேதுராமன் பள்ளியின் தலைமை ஆசிரியை லதா முன்னிலை வகித்தனர்.

கிளைச் செயலாளர் அலெக் ஸாண்டர் துரை வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்துயில் அணிவிக்கப்பட்டு புத்தகம் நினைவு பரிசு வழங்கப் பட்டது. இந்திய செஞ்சிலுவை சங்க இரத்த தானம் செயல் பாடுகள் குறித்து சிவகங்கை சேர்மன் நல்லாசிரியர் சுந்தர்ராமன் சிறப்புரையாற் றினார். சிவகங்கை கிளை துணை சேர்மன் முத்துப்பாண்டி வாழ்த்துரை வழங்கினார்.

பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள 15 பயனாளிகளுக்கு இந்திய செஞ்சிலுவை சங்க தலைமை யகத்திலிருந்து பெறப்பட்ட அரிசி போர்வை துண்டு மளிகை சாமான்கள் வழங்கி மகிழ்ந்தனர்.

காளையார்கோவில் கிளை துணைச் சேர்மன் நாக ராஜன் நன்றி கூறினார். இந்திய செஞ் சிலுவை சங்க காளையார் கோவில் கிளை துணைத் தலைவர் ஆரோக்கியசாமி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

பொருளாளர் ராமநாதன் செயற்குழு உறுப்பினர்கள் சூசை ஆரோக்கிய மலர் சுரேஷ் டேவிட் நாகலிங்கம் பாலசுப்பிரமணியன் ஆசிரியை ரோசாலி ஆசிரியர் பால் ஜோசப் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## செங்கல்பட்டு 17வது வார்டு திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா





பல்லாவரம் ஜன 19

செங்கல்பட்டு 17வது வார்டு திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லா வரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 17வது வார்டு திமுக வழக்கறிஞர் பி.ஜி.பிரபு அவர்கள் ஏற்பாட்டில் இரு வன்னக்கொடியேற்றி வைத்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சுமார் 700 நபர்களுக்கு பேண்ட், ஷர்ட், புடவை, உள்ளிட்ட உதவிகளை வழங்கினார் அதனை தொடர்ந்து

அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுடன் இணைந்து மேளதாளம் முழுக்க ஊர்வ லமாக நடந்து சென்று உற்சா கமாக பொங்கல் கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

இதில் தாம்பரம் மாநகர அணிகளின் துணை அமைப் பாளர்கள், 17வது வார்டு நிர்வா கிகள் மற்றும் மகளிர் அணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இளையான்குடியில் சமத்துவ பொங்கல் கொண்டாடிய எம்.எல்.ஏ





மானாமதுரை ஜன.19

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி இளையான்குடி பேரூர் M.N.A.S நடுநிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப் பினர் சுப.மதியரசன், இளை யான்குடி பேரூராட்சி தலைவர் நஜுமுதீன் கிழக்கு ஒன்றிய செயலாளர் தமிழ்மாறன் பள்ளி தாளாளர் முகமது கனி பேரூராட்சி துணைத் தலைவர் டி கே இப்ராகிம் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் இஸ்ரின் பேகம் பள்ளி முதல்வர் சத்யா தேவி கண்ணமங்கலம் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் சுப.தமிழரசன் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன், இராஜேந்திரன் ஒன்றிய பொருளாளர் முருகேசன்

பேரூர் கவுன்சிலர்கள் O.A.தௌலத், நடராஜன், கிருஷ்ணவேணி, சவுரியாத் பேகம், இராஜவேலு பேரூர் நிர்வாகிகள் ஜெயினுலாபுதீன், D.M.A ரவூப் இபுராஹிம் ஷா ஒன்றிய நிர்வாகிகள் சத்தியேந்திரன், ஜெயராமன், சுதர்ஷன் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ராஜா மற்றும் நிர்வாகிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161